


கோவை – மேட்டுப் பாளையத்தில் பல்வேறு நலத்திட்ட உதவியாளர் வழங்கி ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றினார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ‘புதிய விரிவான சிற்றுந்து திட்டம்’-திருச்சி – தஞ்சை-சேலம்-ஈரோடு

# வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது!

பெரம்பலூர், பிப்.24-

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், புதிய விரிவான சிற்றுந்து திட்டம் 2024 தொடர்பாக திருச்சி, தஞ்சாவூர், சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட மண்டல அலுவலரக்ள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

முதன்மை செயலாளர், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்படுத்தப்படவுள்ள புதிய விரிவான சிற்றுந்து திட்டம் - 2024 மூலம் இதுவரை எத்தனை புதிய வழித்தடங்கள் தேர்வு செய்ப்பட்டுள்ளது என்பது குறித்தும், தேர்வு செய்யப்பட்ட வழித்தடங்களில் எவையெல்லாம் மாவட்ட அரசிதழில் வெளிவந்துள்ளது என்பது குறித்தும் ஒவ்வொரு மண்டலங்களுக்குட்பட்ட மாவட்டங்கள் வாரியாக போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆய்வு செய்தார்.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிற்றுந்து இயக்குவது தொடர்பாக எத்தனை விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது என கேட்டறிந்த போக்குவரத்துத்துறை அமைச்சர், சிற்றுந்து திட்டம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களிடமும் கருத்துக்களை கேட்டு சிற்றுந்து இயக்கம் தேவைப்படும் வழித்தடங்கள் குறித்தும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், போக்குவரத்துத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, புதிய மினி பேருந்துத் திட்டம் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், அதற்காக ஒப்பந்தம் வெளியிடப்பட்டு புதிய மனுக்களும் பெறப்பட்டு வருகின்றது. இதுதொடர்பாக தமிழ்நாடு முழுவதும் ஆய்வு நடைபெற்று வருகிறது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கூட சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு ஆய்வு நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் மினி பேருந்து இயக்கம் தொடர்பாக எவ்வளவு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது, அதற்காக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை குறித்த இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி காலத்திலேயே மினி பேருந்து இயக்கம் என்ற சிறப்பான திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது மேலும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு, பேருந்துகள் செல்ல முடியாத குக்கிராமங்களுக்கும் மினி பேருந்து சேவையை நீட்டித்து, அதன் மூலம் அந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்து வசதி பெறுவதுடன், மற்ற இடங்களுக்கும் போக்குவரத்து இணைப்பு கிடைக்கும் என்பதற்காக ‘மினி பேருந்து சேவைத் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் மே2025 மாதத்திற்கு முன்பாக இத்திட்டத்தினை முழுவதுமாக முடித்து செயல்படுத்துவது தான் போக்குவரத்து துறையின் முக்கிய நோக்கமாக உள்ளது. அதற்காக இந்த ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஏற்கனவே 62 வழித்தடங்களுக்கான மினி பேருந்து அனுமதி வழங்கப் பட்டுள்ளது. மினி பேருந்து இயங்காத வழித்தடங்களின் உரிமையாளர்களுக்கு முறையாக தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் விரும்பினால் அந்த வழித்தடத்தில் தொடரவும், முடியாத பட்சத்தில் வழித்தடத்தினை ரத்து செய்து புதிதாக வழித்தடம் துவங்கப்பட்டு மினி பேருந்து சேவை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இச்சேவைகளை சிறப்புடன் செம்மைபடுத்துவதற்காக புதிய மினி பேருந்து வழித்தடங்களை அப்பகுதிக்குட்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலர்கள் ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக ஒப்புதல் பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், போக்குவரத்துத்துறை இணை ஆணையர் அழகரசு, துணை போக்குவரத்து ஆணையர்கள் செல்வகுமார், ஜெயக்குமார், திருச்சி, தஞ்சாவூர், சேலம் மற்றும் ஈரோடு மண்டலங்களுக்கு உட்பட்ட மண்டல அலுவலர்கள், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அண்ணாமலை விளம்பர விரும்பியாக இருக்கிறார், பொதுவெளியில் பேசத்தகாத வார்த்தைகளில் பேசி வருகிறார், போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் பெரம்பலூரில் பேட்டி

தமிழகத்தில் புதிய விரிவான சிற்றுந்து திட்டம் குறித்து மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கலந்து கொண்டு, இத்திட்டம் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார், தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து தெரிவித்தவர், கிராமப்புற மக்களுக்கும் பயனடையும் வகையில் இத்திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் தற்பொழுது மீண்டும் சிற்றுந்து திட்டம் தொடங்கப் பட்டுள்ளது, ஏற்கனவே அனுமதி பெற்று ஓட்டாமல் இருக்கும் சிற்றுந்து உரிமையாளர்களுக்கு, நோட்டீஸ் வழங்கப்படும் அவர் வாகனத்தை இயக்கவில்லை என்றால் அந்த வழித்தடத்தில் புதிய சிற்றுக்கான அனுமதி வழங்கப்படும், தமிழகத்தில் இதுவரை1801 வழித்தடங்கள் கண்டறியப்பட்டு இதில் 1549 வழித்தடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. தற்போது 278 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இதற்கான நாட்கள் கூடுதலாக உள்ள நிலையில் வரும் மே மாதம் வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவித்தார், சி.என்.ஜி. வாகனங்கள் மற்றும் ஆட்டோவை பொருத்தவரை புதிய தொழில்நுட்பத்தை வரவேற்கக் கூடிய சூழ்நிலை இருந்தாலும், சிற்றுந்துக்கு பாதிப்பு இல்லாத வகையில் இவைகள் ஆய்வு செய்யப்பட்டு அதற்கான பர்மிட் வழங்கப்படும் என தெரிவித்தார், அரசு போக்குவரத்து கழகங்களில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. தற்பொழுது மீதமுள்ள பணியிடங்களுக்கு வரும் மார்ச் மாதத்துக்குள் அறிவிப்பு வெளியிடப்படும் அதன் பின் முழுமையாக காலி பணியிடங்கள் நிரப்பப்படும் என தெரிவித்தார், மேலும் மும்மொழி கொள்கை என்பது ஹிந்தியை கட்டாயமாக்க கூடாது என்பதை தவிர விருப்ப பாடமாக அவரவர்கள் எடுத்து படிக்கலாம் அதற்கான கட்டுப்பாடு ஏதும் கிடையாது, மும்மொழிக் கொள்கையை எதிர்ப்பதாக தெரிவித்தவர், கரூரில் துணை முதல்வரை, அண்ணாமலை விமர்சனம் செய்தது குறித்து கேட்ட போது, அவர் விளம்பர விரும்பியாக இருக்கிறார், பொது இடங்களில் பேசத்தகாத வார்த்தைகள் பேசி வருகிறார். அதற்கு தமிழில் விளக்கம் தருகிறார். இவரை வெளிச்சத்திற்கு காட்டி கொண்டு, விளம்பரப் படுத்திக் கொள்ள இது போன்ற பேச்சுகளை மேற்கொண்டு வருகிறார் என தெரிவித்தார்.



திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூத்தைப்பார் பேரூராட்சியில் பள்ளி குழந்தைகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் காலை நேரத்தில் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்வதற்கு சிறப்பு பேருந்து வேண்டி திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களிடம் கூத்தைப்பார் கிராம மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த கோரிக்கையை ஏற்று பள்ளி குழந்தைகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் கூத்தைப்பார் கிராமத்தில் புதிய பேருந்து வழித்தடத்தை பள்ளிகளுக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்து பேருந்திலும் பயணம் செய்தார். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாநிதி, கூத்தாப்பர் பேரூராட்சி தலைவர் செல்வராஜ், கூத்தாப்பர் பேரூராட்சி செயலாளர் தங்கவேல் மற்றும் அரசு போக்குவரத்து திருச்சி மண்டலம் நிர்வாக இயக்குனர் பொன்முடி ,பொது மேலாளர் முத்துகிருஷ்ணன், துணை மேலாளர் சுரேஷ்குமார், துவாக்குடி நகர கிளை மேலாளர் ராஜேந்திரன் உட்பட கட்சி நிர்வாகிகள், போக்குவரத்து துறை சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கோவை - மேட்டுப்பாளையத்தில்

# அரசு மருத்துவமனையில் ரூ. 20 கோடியில் அவசர சிகிச்சை மையம்!

## ஆ.இராசா எம்.பி. திறந்து வைத்தார்

கோவை, பிப்.24-

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 20 கோடி செலவில் 50 படுக்கை வசதிகள் கொண்ட அவசர சிகிச்சை மையம், அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியில் ரூபாய் 27 லட்சம் செலவில் புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம், தோலம்பாளையம் ஊராட்சியில் மலைவாழ் மக்களுக்கு கட்டபட்ட தொகுப்பு வீடுகள், தேக்கம்பட்டி ஊராட்சியில் ரூபாய் 71 லட்சம் செலவில் சமுதாய நலக்கூடம், சிறுமுகையில் ரூபாய் 19 லட்சம் செலவில் பேரூராட்சி அலுவலகத்தில் கூடுதல் கட்டிடம், காரமடை பகுதியில் ரூபாய் 3 கோடியே 31 லட்சம் நகராட்சி அலுவலக கூடுதல் கட்டிடம் திறப்பு, வீரபாண்டி 50 லட்சம் செலவில் நியாய விலைக்கடை, கூடலூர் நகராட்சி பகுதியில் சிறு பாலங்கள் ரூபாய் 1 கோடியே 49 லட்சம் செலவிலும் ரூபாய் 2 கோடி செலவில் புதிய சாலை அமைத்தல் உள்ளிட்ட 30 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டங்கள் மற்றும் புதிய பணிகளை கழக துணைப்பொதுச்செயலாளரும் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினருமான ஆ. ராசா தொடங்கி வைத்தார்..

மேலும் மேட்டுப்பாளையத்தில் இருந்து கோவைக்கு சென்று வந்த அரசு பேருந்து சேவையை வன பத்திரகாளியம்மன் கோவில் வழியாக தேக்கம்பட்டி சென்று காரமடை வழித்தடத்தில் இயங்கும் வகையில் பேருந்து சேவையும் அன்னூரில் இருந்து வாக்கனாங்கொம்பு பகுதிக்கும் நீட்டிப்பு பேருந்து வசதியை அவர் தொடங்கி வைத்தார்.

இதனிடையே அனைத்து இந்து சமுதாய நலக்கூடமான நந்தவனத்தின் அனுமதியை மூன்றாண்டுகள் நீடித்து அதற்கான உத்தரவு நகலை அதன் நிர்வாகி களிடம் வழங்கினார்..

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஆ.ராசா எம்பி

கடந்த நிதியாண்டு மற்றும் அதற்கு முந்தைய நிதி ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் முடிவுற்று இன்று மக்களுக்கு பயன்பாட்டிற்க்காக திறந்துள்ளோம்..கோவை மாவட்டத்தின் கடைக்கோடியில் உள்ள மலைவாழ் மக்களின் தேவைகளை உணர்ந்து பழங்குடியின மக்களுக்கு தொகுப்பு வீடுகள் தந்துள்ளதோடு முன்னேப்போதும் இல்லாத வகையில் மலைவாழ் மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு கொண்டு வருகிறது, என்றார்..

அதனை தொடர்ந்து காரமடை அருகே திம்பபாளையத்தில் திமுக சார்பில் நடைபெற்ற நலத்திட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள்,

பால் கேன்,தையல் மெஷின் என 25 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்டங்களை வழங்கினார்

இந்த நிகழ்ச்சிகளில் கோவை மாவட்ட ஆட்சி தலைவர் பவன்குமார் , கோவை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, ஒன்றிய செயலாளர் சுரேந்திரன் ,எஸ் எம் டி கல்யாணசுந்தரம் , இந்து அறநிலைத்துறை குழு உறுப்பினர் கவிதா கல்யாணம் சுந்தரம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி ஆர். சண்முகசுந்தரம் அசரப்அலி , மாவட்ட அமைத் தலைவர் புருஷோத்தமன், மேட்டுப்பாளையம் நகர செயலாளர் முனுசாமி, முகமது யூனுஸ், காரமடை நகர செயலாளர் வெங்கடேஷ், காரமடை நகர தலைவர் உஷா வெங்கடேஷ், சிறுமுகை பேரூர் கழகச் செயலாளர் உதயகுமார், சிறுமுகை பேரூர் கழக தலைவர் மாலதி உதயகுமார், கோவை கூடலூர் நகர மன்ற தலைவர் அறிவரசு மருத்துவர் கோகுல் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அக்கீம் , துணை அமைப்பாளர் விக்கி, சூரியன் தம்பி, நெசவாளர் அணி அமைப்பாளர் நடராஜன், மீனவர் அணி அமைப்பாளர் ராம் குட்டி, சிறுமுகை ரியாஸ் உள்ளிட்ட திமுகவினர் மற்றும் அரசு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம்.சித்திக், ஏ.சி.என்.விஜயபாலன், மாவட்டக்கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர் மு.ஞானவேலன் மற்றும் பலர் உள்ளனர்.



குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், நல்லநாயகபுரம் கிராமத்தில் தீ விபத்தினால் 5 குடிசை வீடு எரிந்து சேதமடைந்த செய்தி அறிந்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் சென்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, நிதியுதவி, மளிகைப் பொருட்கள், அரசி மற்றும் உடை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கினார். உடன் செந்துறை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் உள்ளிட்ட கழக தோழர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கொத்தக்கோட்டை ஊராட்சி, தோப்புப்பட்டி வீரமகாளியம்மன் கோவில் அருகில், புதிதாக கட்டப்பட்டுள்ள கலையரங்கம் கட்டடத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 18.02.2025 அன்று திறந்து வைத்தார். உடன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.